முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 293, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

293—

மீன்பிடி வலை பின்னும் கூடம்

*4934—**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பஞ்சல் மீனவர் கிராமத்தில் மீன்பிடி வலை பின்னும் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பஞ்சல் மீனவ கிராமத்தில் 10 மீனவக் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. மொத்தமே 12 மீனவர்கள் அதாவது இரண்டு ஃபைபர் படகுகள் மற்றும் 3 கட்டுமரங்களைக் கொண்டுதான் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பிடிக்கும் மீன்களை அருகிலுள்ள பெருமணல் மீனவ கிராமத்தில் விற்பனை செய்து வருகின்றனர். இம்மீனவர்களில் பெரும்பாலான மீனவர்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகவும் உள்ளனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கும் நலத் திட்ட உதவிகள் அனைத்தும் இந்த பெருமணல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவே பயன்பெற்று வருகின்றனர். எனவே, 12 மீனவர்கள் மட்டுமே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் பஞ்சல் கிராமத்தில் வலை பின்னும் கூடம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

2013 ஏப்ரல் 22]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 294, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

294—

புதிய வட்டம்

***20785—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒத்தக்கடையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை வடக்கு வட்டத்தைப் பிரித்து, புதிய மதுரை கிழக்கு வட்டம் ஏற்படுத்த மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் முதற்கட்ட அறிக்கை உயர்மட்டக் குழுவிற்கு வந்துள்ளது. இதுகுறித்த முழுமையான செயற்குறிப்புகள் பெறப்பட்டவுடன் மேற்சொன்ன வட்டம் பிரிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

திரு. கா. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் ஏழைகளின் இதயம், தமிழகத்தை முதல் மாநிலமாக